**ஆகஸ்ட் - 02**

# TNPSC துளிகள்

- 2019-20 ஆம் ஆண்டில் அதிக அளவில் ஆஸ்திரேலியக் குடியுரிமையைப் பெரும்பான்மையான அளவில் பெறும் புலம்பெயர்ந்தோர் இந்தியர்கள் ஆவர்.
- இந்திய நிதி உதவியுடன், மொரீஷியஸ் நாட்டில் போர்ட் லூயிஸில் கட்டப்பட்ட புதிய உச்ச நீதிமன்றத்தை பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜுக்னாத் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.
- ஏர் இந்தியாவில் 100% அந்நிய நேரடி முதலீட்டை மேற்கொள்ள வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு நிதி அமைச்சகம் அனுமதித்துள்ளது.
- ஸ்பெயினில் உள்ள சபிக் பன்னாட்டு ரசாயன உற்பத்தி நிறுவனத்தின் பாலிகார்பனேட் பிரிவானது, புதுப்பிக்கத்தக்க சக்தியில் முழுமையாக இயங்கும் உலகின் முதல் பெரிய அளவிலான தொழிலகமாக உருவெடுத்து உள்ளது.
- நோயாளியால் வெளியிடப்படும் நோய்த் தொற்றுகள் பரவுதலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கோவிட்-19 தொற்றுநோய்க்கு எதிராகப் போராடுவதற்காக வேண்டி மருத்துவ ரீதியில் தனிமைப்படுத்தும் அமைப்பான 'ஆஷ்ரே' என்ற அமைப்பை ராணுவத்தின் மேம்பட்ட தொழில்நுட்ப நிறுவனமானது உருவாக்கியுள்ளது.
- ஈரானின் புரட்சிகர இஸ்லாமிய பாதுகாப்புக் காவல்படை 'சிறந்த நபி 14' என்ற இராணுவப் பயிற்சியின் போது நிலத்தடியில் கண்டம் விட்டு கண்டம் பாயும் பாலிஸ்டிக் வகை (உந்துவிசைக்குரிய) ஏவுகணைகளை ஏவி சோதனை செய்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## பாரதி உரையின் 100வது ஆண்டு



Mahakavi Bharathi Memorial Library

- 1921 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதி, மகாகவி பாரதி ஈரோடு கருங்கல்பாளையம் வாசிப்பு அறைக்கு வந்து 'மனிதன் அழிவற்றவன்' என்ற தலைப்பில் பொதுமக்களுக்கு உரை நிகழ்த்தினார்.
- கருங்கல்பாளையத்தில் அவர் ஆற்றிய உரை தான் பொதுமக்கள் மத்தியில் அவர் ஆற்றிய கடைசி உரையாகும்.
- பின்னர் அந்த வாசிப்பு அறையானது மகாகவி பாரதி நினைவு நூலகம் என மறுபெயரிடப் பட்டது.
- இது ஈரோட்டின் கருங்கல்பாளையத்தில் அமைந்துள்ள ஒரு பொது நூலகமாகும்.

# தேசியச் செய்திகள்

## இந்தோ இஸ்லாமிய கலாச்சார அறக்கட்டளை

- அயோத்தியில் ஒரு மசூதியைக் கட்ட இந்த அறக்கட்டளை அமைக்கப்பட்டுள்ளது.
- இது ராம் ஜன்மபூமி-பாப்ரி மஸ்ஜித் தகராறு வழக்கில் உச்சநீதிமன்றத்தின் 2019 ஆண்டின் நவம்பர் மாத உத்தரவுக்கு இணங்கிய படி அமைக்கப்பட்டு உள்ளது.
- உத்தரப்பிரதேசத்தின் மத்திய சன்னி வக்ஃப் வாரியமானது இதற்கு அறங்காவலராக இருக்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆளுநர் குழுவின் ஐந்தாவது வருடாந்திரக் கூட்டம்

- இது 'கனெக்ட்டிங் பார் டுமாரோ' (நாளைக்காக இணைவது) என்ற கருப்பொருளின் கீழ் இணைய வாயிலில் நடத்தப் பட்டது.
- இந்தச் சந்திப்பில் சீனாவின் ஜின் லிகுன் மீண்டும் இதன் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- தற்போது, இந்த வங்கியில் இந்தியாவானது 7.65% வாக்கிற்கான பங்குகளைப் பெற்று உள்ளது. அதே நேரத்தில் சீனா இந்த அமைப்பில் 26.63% பங்குகளை வைத்திருக்கிறது.
- இச்சந்திப்பின் போது, அந்த வங்கியில் சேர லைபீரியா அளித்த விண்ணப்பத்திற்கு ஆளுநர் குழுவானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த வங்கியானது 57 நிறுவன உறுப்பினர்கள் என்ற அளவிலிருந்து 103 என்ற அளவில் அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட வங்கியாக வளர்ந்துள்ளது.
- இதன் ஆறாவது வருடாந்திரக் கூட்டம் 2021 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு

அமீரகத்தில் உள்ள துபாயில் நடத்தப் பெறும்.

- மத்தியக் கிழக்கு நாட்டில் நடக்கும் முதலாவது வருடாந்திரக் கூட்டமாக இது அமையும்.

## நச்சு உண்மை

- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் மற்றும் சர்வதேச இலாப நோக்கற்ற அமைப்பான தூய பூமி ஆகியவை சுகாதார நெருக்கடி குறித்த முதல் வகையான தமது அறிக்கையை எழுதி வெளியிட்டுள்ளன.
- இது "நச்சு உண்மை: காரீய மாசுபாட்டுடன் இணைத்து குழந்தைகளை ஈடுபடுத்துவது அவர்களின் எதிர்கால ஆற்றலின் குறைபாட்டிற்கு வழிவகுக்கிறது" என்று தலைப்பிடப் பட்டுள்ளது.
- இது உலகெங்கிலும் உள்ள ஏராளமான குழந்தைகளைப் பாதிக்கும் காரீய நச்சுத் தன்மையைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## யமுனை நீரில் அம்மோனியா

- யமுனை ஆற்றில் அதிக அளவு அம்மோனியா (3 பிபிஎம்) சமீபத்தில் கண்டறியப் பட்டது.
- இந்தியத் தர நிர்ணயப் பணியகத்தின் படி, குடிநீரில் அம்மோனியாவின் ஏற்றுக் கொள்ளக் கூடிய அதிகபட்ச வரம்பு 0.5 பிபிஎம் (ppm/parts per million) ஆகும்.
- அம்மோனியா ஒரு நிறமற்ற வாயு ஆகும். இது உரங்கள், நெகிழி, செயற்கை இழைகள், சாயங்கள் மற்றும் பிற பொருட்களின் உற்பத்தியில் ஒரு தொழில்துறை இரசாயனமாக பயன்படுத்தப் படுகிறது.

## உறுதிபடுத்தப் பட்ட பாதுகாப்பு | புலிகளின் தரநிலைகள் [CA | TS]

- இது 2013 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு பாதுகாப்பு உத்தியாகும் ([CA | TS] - Conservation Assured | Tiger Standards).
- இந்த முயற்சிக்கு முதலில் தேர்ந்தெடுக்கப் பட்டது புலிகள் இனமாகும்.
- இது ஜாகுவார், சிங்கம் மற்றும் நன்னீர் டால்பின்கள் உள்ளிட்ட பிற இனங்களுக்கும் பயன்படுத்தப் படுகிறது.
- புலிகள் தன் இயற்கை வாழ்விடத்தில் காணப்படும் நாடுகளில் இதைச் செயல்படுத்த உலகளாவிய இயற்கை நிதியமானது உதவுகிறது.


- இந்தியாவின் தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையமானது நாட்டின் 50 புலிகள் பாதுகாப்புச் சரணாலயங்களிலும் இதை ஏற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது.
- இந்த அறிவிப்பானது TX2 என அழைக்கப்படும் இலக்கான, காடுகளில் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க 2010 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட உலகளாவிய இலக்கிற்கு இந்தியாவின் பங்களிப்பை மேலும் பலப்படுத்துகிறது.
- இந்த 50 புலிகள் பாதுகாப்புச் சரணாலயங்கள் நாட்டின் 18 மாநிலங்களில் பரவி உள்ளது. இது உலகின் புலிகளின் எண்ணிக்கையில் 70%க்கும் அதிகமாக உள்ளது.
- இதன் மூலம் தேசிய அளவில் “CA | TS” அமைப்பை ஏற்றுக் கொண்ட இயற்கையான வாழ்விடங்களில் புலிகள் காணப்படும் 13 நாடுகளில் இந்தியா முதலிடம் வகிக்கிறது.
- புலிகள் அறிக்கை 2018 என்ற அறிக்கையின் படி, 2006 முதல் 2018 வரை இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கையானது ஆண்டுக்கு 6% அதிகரிக்கும் விகிதத்தில் காணப் பட்டுள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## பர்ன்ட் சுகர் - புத்தகம்

- அவ்னி தோஷி எழுதிய முதல் புதினமான 'பர்ன்ட் சுகர்' (எரிக்கப்பட்ட சர்க்கரை) ஐக்கிய இராச்சியத்தில் (இங்கிலாந்து) வெளியிடப் பட்டுள்ளது.
- அதே புதினத்தின் பதிப்பு இந்தியாவில் 'கேர்ள் இன் ஒயிட் காட்டன்' (Girl in White Cotton) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- மதிப்பு மிக்க 2020 ஆம் ஆண்டிற்கான புக்கர் பரிசின் காத்திருப்புப் பட்டியலில் உள்ள 13 ஆசிரியர்களின் பதிப்புகளில் இதுவும் ஒன்றாகும்.
- இங்கிலாந்து அல்லது அயர்லாந்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வெளியிடப்படும் அந்தந்த ஆண்டுகளின் சிறந்த புத்தகத்திற்கு இந்த விருதானது வழங்கப் படுகிறது.




## பாடி பவஜலாலு - புத்தகம்

- இந்தியாவின் துணைத் தலைவரான எம்.வெங்கையா நாயுடு, “பாடி பவஜலலு” புத்தகத்தை இணைய நிகழ்ச்சியின் வழியில் வெளியிட்டார்.
- இது மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.ஜெய்ப்பால் ரெட்டி எழுதிய 'பத்து கருத்தியல்கள்' (Ten Ideologies) என்ற புத்தகத்தின் தெலுங்குப் பதிப்பாகும்.




## புவி அமைப்பு அறிவியலில் சிறந்து விளங்குவதற்கான தேசிய விருதுகள்

- இந்த விருதுகளை புவி அறிவியல் அமைச்சகமானது அறிவித்துள்ளது.
- இந்த அமைச்சகமானது பேராசிரியர் அசோக் சாஹ்னிக்கு உயிர்ப் பாறைப்படிவியல் (பயோஸ்டிராடிகிராபி), புவியியல் (Geology) மற்றும் முதுகெலும்பு தொல்லுயிரியல் (Vertebrate Palaeontology) ஆகிய துறைகளில் பெரும் பங்களிப்பு செய்ததற்காக 2020 ஆம் ஆண்டிற்கான வாழ்நாள் சாதனை விருதை வழங்கியுள்ளது.
- பெருங்கடல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருதானது டாக்டர் வி.வி.எஸ்.எஸ். சர்மா அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

- அவர் விசாகப்பட்டினத்தில் உள்ள தேசியக் கடல்சார் நிறுவனத்தின் ஒரு மூத்தக் கொள்கை விஞ்ஞானி ஆவார்.
- கோவாவின் துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் இயக்குநர் எம்.ரவிச்சந்திரன் அவர்களுக்குக் கடல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★